# ALAGAPPA UNIVERSITY

[Accredited with A+ Grade by NAAC (CGPA:3.64) in the Third Cycle]

**KARAIKUDI – 630 003, TAMIL NADU, INDIA**

அபக/வமேப/பழைய பொருள்கள் ஏலம்/2020 நாள் : 02.06.2020

பேரா. கு. குருமலேஷ் பிரபு
பதிவாளர்

**ஏல அறிக்கை**

அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள உபயோகமற்ற பழைய பொருள்கள் (இரும்புச் சாமான்கள், மரச்சாமான்கள், பிளாஸ்டிக் பொருள்கள் மற்றும் இதரச் சாமான்கள்) ஏலம் விட உள்ளன. விருப்பமுள்ளவர்கள் **ரூ.5000/-க்கு டேவணித் தொகையாக பதிவாளர், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி** என்ற பெயரில் வங்கி வரைவோலை எடுத்து தங்களின் அதிகபட்ச விலையை குறிப்பிட்டு ஒப்பந்தப் **புள்ளியை மூடி முத்திரையிட்ட உறையை (அபக/வமேப/பழைய பொருள்கள் ஏலம்/2020 என்று குறிப்பிட்டு)** மேற்குறிப்பிட்ட முகவரிக்கு **02.07.2020** மாலை **4.00** மணிக்குள் அனுப்ப வேண்டும்.

ஏலம் குறிப்பிடும் போது கீழ்க்கண்டவாறு விலை குறிப்பிடவும்

| வரிசை எண் | பொருள்கள் | விலை விபரம் |
|---|---|---|
| 1 | இரும்புச் சாமான்கள் | ரூ……/- 1 கி.கி வீதம் |
| 2 | மின்சாரப் பொருள்கள் | ரூ……/- 1 கி.கி வீதம |
| 3 | மரச்சாமான்கள் | ரூ……/- 1 சதுர அடி வீதம |
| 4 | பிளாஸ்டிக் பொருள்கள் | ரூ……/- 1 கி.கி வீதம் |
| 5 | இதரச் சாமான்கள் | ரூ……/- 1 கி.கி வீதம் |

**நிபந்தனைகள்**

1. மேற்கண்ட பழைய பொருள்களை 25.06.2020 மற்றும் 26.06.2020 ஆகிய தினங்களில் பல்கலைக் கழக பதிவாளரின் முன் அனுமதி பெற்று அலுவலக நேரங்களில் நேரில் பார்வையிடலாம்.
2. ஏலம் எடுத்த பொருட்களை இவ்வளாகத்திற்குள் மறு ஏலம் விடக் கூடாது.
3. ஏலம் எடுத்தவரின் டேவணித் தொகை பிணை வைப்புத் தொகையாக கருதப்படும். ஏலம் சாரி ஆகாத இனங்களுக்கு டேவாணித் தொகை திரும்ப வழங்கப்படும்.
4. ஏலம் எடுத்தவர் ஐந்து நாட்களுக்குள் முழுத் தொகையையும் இவ்வலுவலகத்தில் வங்கி வரைவோலை மூலம் செலுத்த வேண்டும். தவறினால் டேவாணித் தொகையை பறிமுதல் செய்யப்படும்.
5. ஏலம் எடுத்த முழுத்தொகையில் 28% சரக்கு மற்றும் சேவை வரியுடன் சேர்த்து செலுத்தப்பட வேண்டும்.

6. அழகப்பா பல்கலைக்கழகம் பதிவாளர் ஒப்புதலுக்குப் பின் ஏலம் எடுத்த பழையப் பொருள்களை பல்கலைக் கழக சொத்துக்குளுக்கு எவ்வித பங்கமும் ஏற்படாமல் **ஏழு நாட்களுக்குள்** எடுத்துச் செல்ல வேண்டும்.
7. பதிவாளரின் முடிவே இறுதியானது.
8. எவ்வித காரணமும் குறிப்பிடாமல் ஏலத்தை ரத்து செய்யவோ அல்லது நிறுத்தி வைக்கவோ பதிவாளருக்க அதிகாரமுண்டு.
9. ஒப்பந்தப்புள்ளி வந்த சேரவேண்டிய கடைசி நாள் 02.07.2020 மாலை 4.00 மணி.

**பதிவாளர்**